தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# கறவை மாடுகள் வாங்க கடனுதவித் திட்டம்: வங்கியாளர்களுக்கு ஆட்சியர் வேண்டுகோள்

First Published : 01 Jul 2012 11:22:33 AM IST

மதுரை, ஜூன் 30: கால்நடை பராமரிப்புத் துறையுடன் இணைந்து, விவசாயிகளுக்கு சிறந்த கறவை மாடுகள் வாங்கிக் கொடுக்க வங்கிகள் முன் வரவேண்டும், என்று மாவட்ட ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா கேட்டுக் கொண்டார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில், அவர் மேலும் பேசியது:

நடப்பு ஆண்டில் 2,500 பேருக்கு 5 ஆயிரம் கறவை மாடுகள் வாங்குவதற்கு வங்கிகள் கடனுதவி அளிக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு கடனுதவி அளிப்பதோடு நின்றுவிடாமல், கால்நடைப் பராமரிப்புத் துறையுடன் இணைந்து, நல்ல கறவை மாடுகளை விவசாயிகளுக்கு வங்கிகள் வாங்கிக் கொடுக்க வேண்டும்.

மதுரை மாவட்டத்தில் மக்கள்தொகை 2 ஆயிரத்துக்கும் மேல் உள்ள 157 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, முதியோர் உதவித் தொகை வங்கிகள் மூலம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் முதல்கட்டமாக, 17 கிராமங்களில் முதியோருக்கு பயோமெட்ரிக் ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 25 கிராமங்களில் இப்பணி நடைபெற்று வருகிறது என்றார்.

மேலும், கிராமப்புற விவசாயிகளுக்கு கிஷான் கிரெடிட் கார்டு வழங்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறியும் வகையில், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் விவசாயிகள் ஒருங்கிணைப்புக் கூட்டத்தை நடத்த, ஆட்சியரின் நேர்முக உதவியாளருக்கு (வேளாண்மை) அறிவுறுத்தினார்.

அனைத்து வங்கிகளும் தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை குறிப்பிட்ட காலத்துக்குள் அடைய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில், கனரா வங்கி உதவிப் பொது மேலாளர் பாலவிநாயகம், ரிசர்வ் வங்கி உதவிப் பொதுமேலாளர் ஜார்ஜ், முன்னோடி வங்கி மேலாளர் கே.என். சுப்பிரமணியன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## தோட்டக்கலை மாணவிகள் ஏலத் தோட்டத்தில் கள ஆய்வு

First Published : 01 Jul 2012 11:41:44 AM IST

போடி, ஜூன் 30: தோட்டக் கலை கல்லூரி மாணவிகள் போடிமெட்டு மலை கிராமத்தில் கள ஆய்வு மேற்கொண்டனர்.

பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவியர் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் போடி மெட்டு மலை கிராமத்தில் தங்கி கள ஆய்வு மேற்கொண்டனர். போடிமெட்டு மலை கிராமத்தில் ஏலக்காய், காபி ஆகிய பயிர்கள் விவசாயம் செய்யப்படுகிறது.

போடி தோட்டக் கலை உதவி இயக்குநர் வே.கெர்சோன் தங்கராஜ், உதவி வேளாண்மை இயக்குநர்கள் காமராஜ், விவேகானந்தன், தோட்டக்கலை வாரிய அலுவலர் ரமேஷ், போடி இந்தியன் வங்கி மேலாளர் அகிலன் ஆகியோர் உதவியுடன் ஏலச்செடிகள் பயிர் செய்வது, அவற்றில் நோய் வராமல் தடுப்பது, அதிக விளைச்சல் பெறுவது குறித்து செயல் விளக்கம் பெற்றனர்.

மேலும், ஏல விவசாயிகளிடம் ஏலச் செடிகளிலிருந்து பறிக்கப்படும் ஏலக்காய்களைப் பதப்படுத்தி விற்பனைக்கு அனுப்புவது, ஏலக்காயின் தரம் ஆகியவை குறித்து கேட்டறிந்தனர்.

## இன்றும் மழை பெய்ய வாய்ப்பு

First Published : 01 Jul 2012 01:13:59 AM IST

சென்னை, ஜூன் 30: தமிழகம், புதுவையின் சில பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமையும் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது. வெப்பநிலை 100 டிகிரியாக இருக்கும். சனிக்கிழமை பதிவான மழை அளவு (காலை 8.30 நிலவரம்):

நீலகிரி மாவட்டம் தேவாலா - 3 செ.மீ., வால்பாறை மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் - 2 செ.மீ., உதகமண்டலம் - 1 செ.மீ.

சென்னையில் சனிக்கிழமை மாலை சில இடங்களில் மழை பெய்தது.

---

உண்மையின் உரைகல்

# கோழி வளர்ப்பில் ஈரோடு விவசாயிகள் ஆர்வம்

ஜூலை 02,2012,02:05



ஈரோடு:விவசாயத்தில் போதிய லாபம் இல்லாததால், ஈரோடு விவசாயிகள் முட்டைக்கோழி வளர்ப்பில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதையடுத்து, நாமக்கலுக்கு இணையாக, முட்டை உற்பத்தியில் ஈரோடு மாவட்டம் முன்னேறி வருகிறது.தேசிய அளவில், அதிக மஞ்சள் விவசாயிகளை கொண்ட, ஈரோடு மாவட்டத்தில், பல்லாயிரம் ஏக்கரில் கரும்பு, வாழை, நெல் உள்ளிட்ட பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன.

ஆனால், கடந்த சில ஆண்டுகளாக, வேளாண்மையில் போதிய லாபம் கிடைக்காத விவசாயிகள், விளைநிலத்தை ரியல் எஸ்டேட் தொழிலுக்கு தாரை வார்த்து வருகின்றனர். சிலர் முட்டைக்கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

விவசாயத்தை கைவிட்டு, கறிக்கோழி வளர்ப்பில் ஆர்வம் காட்டும் கோழிப்பண்ணை உரிமையாளர்கள் கூறியதாவது:ஈரோடு மாவட்டத்தில் விவசாயத்தில் பல சாதனைகள் படைத்தவர்களில் பலர், கடனில் மூழ்கி கிடக்கின்றனர். விளைபொருளுக்கு உரிய விலை கிடைக்காததும், அரசின் சலுகைகள் முழுமையாக விவசாயியை சென்று சேராததும் தான் இதற்கு காரணம்.எனவே, விவசாயத்தை கைவிட்டு, நாமக்கல்லில் இருந்து முட்டைக் கோழி குஞ்சுகள் வாங்கி வந்து கோழிப்பண்ணை அமைத்துள்ளோம்.

மருந்து, ஊசிகள் போட்டு, கால்நடை டாக்டர்கள் அறிவுரைப்படி கோழிகளை வளர்க்கிறோம். சரியாக, 22 வாரத்தில் முட்டையிடும் பருவத்தை கோழிகள் அடைகின்றன. தொடர்ந்து ஒன்றரை ஆண்டுக்கு, தினமும் ஒரு முட்டையிடுகின்றன.

முட்டைகள் அனைத்தும் கேரளா, கர்நாடகா, ஒடிசா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கு

அனுப்பி வைக்கப்படுகின்றன. ஒன்றரை ஆண்டுகளில், முட்டையிடும் பருவம் முடிந்த கோழிகள், இறைச்சிக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன.நாமக்கல்லுக்கு இணையாக, ஈரோடு மாவட்டமும் முட்டை உற்பத்தியில் முன்னேறி வருகிறது.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**ஆலிவ் எண்ணெய் இறக்குமதி 52 சதவீதம் அதிகரிப்பு**

ஜூலை 02,2012,02:00



புதுடில்லி:நாட்டில் ஆலிவ் எண்ணெய் பயன்பாடு அதிகரித்து வருவதால், இதன் இறக்குமதி, சென்ற 2011-12ம் நிதியாண்டில் 52 சதவீதம் அதிகரித்துள்ளது.
இறக்குமதி செலவு:டாலருக்கு எதிரான ரூபாயின் வெளிமதிப்பு சரிவால், ஆலிவ் எண்ணெய் இறக்குமதி செலவினமும் குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்துள்ளது.கடந்த 2010-11ம் நிதியாண்டில், 4,261 டன்னாக இருந்த ஆலிவ் எண்ணெய் இறக்குமதி, சென்ற 2011-12ம் நிதியாண்டில், 6,485 டன்னாக அதிகரித்துள்ளது.பயன்பாடு:ஆலிவ் எண்ணெய் பயன்பாடு பற்றிய விழிப்புணர்வு நுகர்வோரிடையே வெகுவாக அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக, நடப்பு நிதியாண்டிலும், இதன் இறக்குமதி, அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.ஆலிவ் எண்ணெயில், மோனோசாச்சுரேட் கொழுப்பு அமிலம் அதிகளவில் அடங்கியுள்ளது.எனவே, இதன் மூலம் சமைக்கப்படும் உணவு வகைகள், இதய நோய் உள்ளவர்களுக்கு ஏற்றதாக உள்ளது. ரூபாய் மதிப்பு சரிவால் ஏற்படும் பாதிப்பை சரிக்கட்டும் வகையில், உள்நாட்டில், இதன் வர்த்தகத்தில் ஈடுபடும் முன்னணி நிறுவனங்கள், ஆலிவ் எண்ணெய் விலையை 15-20 சதவீதம் வரை உயர்த்தியுள்ளன.ரூபாய் மதிப்பு:சென்ற 2011ம் ஆண்டு ஏப்ரல் முதல், தற்போது வரையிலுமாக, டாலருக்கு எதிரான, இந்திய ரூபாயின் வெளிமதிப்பு 28 சதவீதம் வரை சரிவடைந்துள்ளது.மேலும், யூரோவிற்கு எதிரான ரூபாய் மதிப்பும் குறைந்துள்ளது.நாட்டின் ஒட்டு மொத்த ஆலிவ் எண்ணெய் இறக்குமதியில், ஸ்பெயின் நாட்டின் பங்களிப்பு 53 சதவீதம் என்றளவில் உள்ளது. இதைத் தொடர்ந்து, 42 சதவீத பங்களிப்புடன் இத்தாலி, இரண்டாமிடத்தில் உள்ளது. மீதமுள்ள 5 சதவீத பங்களிப்பை,அமெரிக்கா, துருக்கி, கிரீஸ், துனிஷியா ஆகிய

நாடுகள் கொண்டுள்ளன.நாட்டின் மொத்த ஆலிவ் எண்ணெய் இறக்குமதியில், "ஆலிவ் போமேஸ்' என்ற சமையல் எண்ணெய் வகையின் பங்களிப்பு 41 சதவீதம் என்றளவில் உள்ளது. ஏனெனில், இதன் சுவை, மணம், இந்திய நுகர்வோருக்கு மிகவும் ஏற்றதாக உள்ளது.

## வரும் 2012-13ம் பருவத்தில்...உலக காபி உற்பத்தி 7 சதவீதம் உயரும்

ஜூலை 02,2012,01:59



புதுடில்லி:வரும் 2012-13ம் காபி பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்), சர்வதேச காபி உற்பத்தி, 7 சதவீதம் வளர்ச்சி கண்டு, 14.80 கோடி மூட்டைகளாக (1 மூட்டை-60 கிலோ) அதிகரிக்கும் என, அமெரிக்க வேளாண் துறை மதிப்பிட்டுள்ளது.இது, நடப்பு 2011-12ம் பருவத்தில், 13.80 கோடி மூட்டைகளாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதையடுத்து, நடப்பு பருவத்தை காட்டிலும், வரும் பருவத்தில், கூடுதலாக, 1 கோடி மூட்டைகள் காபி உற்பத்தியாகும் என தெரிகிறது.கடந்த ஓர் ஆண்டு காலத்தில், சர்வதேச காபி உற்பத்தியில், பிரேசில் நாட்டின், அரபிகா வகை காபியின் பங்களிப்பு 50 சதவீதம் என்றளவில் உள்ளது. வரும் பருவத்தில், பிரேசில் மற்றும் வியட்நாம் நாடுகளில், ரோபஸ்டா வகை காபி உற்பத்தி சிறப்பாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.வரும் பருவத்தில், பிரேசில் நாட்டின் காபி உற்பத்தி, 67 லட்சம் மூட்டைகள் அதிகரித்து, 5.59 கோடி மூட்டைகளாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வியட்நாம் நாட்டின், காபி உற்பத்தி, 2.24 கோடி மூட்டைகளாகவும், கொலம்பியா நாட்டின் உற்பத்தி, 75 லட்சம் மூட்டைகளாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.மதிப்பீட்டு காலத்தில், இந்தியாவின் காபி உற்பத்தி, 51 லட்சம் மூட்டைகளாகவும், இந்தோனேஷியாவின் உற்பத்தி, 97 லட்சம் மூட்டைகளாகவும் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.இவைதவிர, மத்திய அமெரிக்காவின் உற்பத்தி, 1.40 கோடி மூட்டைகளாக இருக்கும். ஆப்ரிக்காவில், சகாராவிற்கு உட்பட்ட பகுதியில் காபி உற்பத்தி, 1.72 கோடி மூட்டைகளாகவும் அதிகரிக்கும். இதில், 50 சதவீத பங்களிப்பை எத்தியோப்பியா மற்றும் ஐவரி கோஸ்ட் நாடுகள் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பாசுமதி அரிசி: ஏற்றுமதி விலையை நீக்க பரிந்துரை

ஜூலை 02,2012,01:58




புதுடில்லி:பாசுமதி அரிசி ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பொருட்டு, அதன் மீதான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை நீக்க வேண்டும் என, மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.இது குறித்த பரிந்துரை கடிதம், மத்திய அமைச்சரவை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, வர்த்தக அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.சென்ற பிப்ரவரியில், முன்னாள் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையிலான அமைச்சரவைக் குழு, ஒரு டன் பாசுமதி அரிசியின் குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை, 200 டாலர் குறைத்து, 700 டாலராக நிர்ணயித்தது. பாகிஸ்தான்:அதே சமயம், அண்டை நாடான பாகிஸ்தான், பாசுமதி அரிசிக்கு குறைந்தபட்ச ஏற்றுமதி விலை எதுவும் நிர்ணயிக்காமல் உள்ளது. இதனால், இந்நாடு, குறைந்த விலையில் பாசுமதி அரிசியை ஏற்றுமதி செய்து, சர்வதேச சந்தையில் இந்தியாவிற்கு கடும் போட்டியை ஏற்படுத்தியுள்ளது.சர்வதேச சந்தையில், போட்டி நாடுகளை விட, இந்தியாவின் நீள் வகை பாசுமதி அரிசி விலை, டன்னுக்கு 1,000 டாலர் அதிகமாக உள்ளது. இந்தியாவில் இருந்து நீள் ரக பாசுமதி அரிசி தான் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

அதனால், இதற்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை நீக்க @வண்டும் என, ஏற்றுமதியாளர்கள் தெரிவித்தனர்.உற்பத்தி:சென்ற 2011-12ம் நிதியாண்டில், இந்தியாவில் பாசுமதி அரிசி உற்பத்தி சிறப்பாக இருந்தது. இந்நிலையில், மத்திய கிழக்கு நாடுகளில், இந்திய பாசுமதி அரிசிக்கான தேவையும் அதிகரித்ததால், நம் நாட்டின் ஏற்றுமதி, 32 சதவீதம் அதிகரித்து, 14 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்தது. இது, முந்தைய நிதியாண்டில், 10 ஆயிரத்து 582 கோடி ரூபாயாக காணப்பட்டது.

நாட்டின் மொத்த பாசுமதி அரிசி ஏற்றுமதியில், ஈரான், சவுதி அரேபியா ஆகிய நாடுகளின் பங்களிப்பு 60 சதவீதமாக உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக, அணுஆயுத பிரச்னையால், ஈரான் பலதரப்பட்ட பொருளாதார தடைகளை சந்தித்து வருகிறது. இது, இந்திய பாசுமதி அரிசி

ஏற்றுமதியாளர்களை பாதிப்பிற்குள்ளாக்கியுள்ளது. இந்நிலையில், மத்திய அரசு, ஈரானிடம் இருந்து பெறும் கச்சா எண்ணெய்க்கு, குறிப்பிட்ட வங்கிகள் மூலமாக ரூபாயில் பணம் செலுத்துவதாக தெரிவித்தது. இதையடுத்து, ஈரான் நாடு, இந்தியாவிலிருந்து பாசுமதி அரிசியை இறக்குமதியை மெல்ல அதிகரித்து வருகிறது.

## 10 லட்சம் ஹெக்டேரில் உணவு வகைகள்

ஜூலை 02,2012,01:43



புதுடில்லி:நடப்பு கரீப் பருவத்தில், இதுவரையிலுமாக, நெல், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளன .சர்வதேச அளவில், உணவு தானியங்கள் பயிரிடுவதில், இந்தியாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. நடப்பு வேளாண் பருவத்தில், இதுவரையிலுமாக, 30 லட்சத்து 72 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில், நெல் பயிரிடப்பட்டுள்ளது.

4 லட்சம் ஹெக்டேரில், பருப்பு வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. 10 லட்சத்து 42 ஆயிரம் ஹெக்டேரில், உணவு தானியங்கள் பயிரிடப்பட்டுள்ளன. 10 லட்சத்து 77 ஆயிரம் ஹெக்டேரில் எண்ணெய் வித்துக்களும், 52 லட்சத்து 22 ஆயிரம் ஹெக்டேரில் கரும்பும் பயிரிடப்பட்டுள்ளன.31 லட்சத்து 38 ஆயிரம் ஹெக்டேரில், பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. 8 லட்சத்து 10 ஆயிரம் ஹெக்டேரில், சணல் பயிரிடப்பட்டுள்ளது என, @வளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## வெங்காயத்திற்கான ஏற்றுமதி தடையை முற்றிலும் நீக்கியது மத்திய அரசு!

ஜூலை 01,2012,15:26



புதுடில்லி : நாட்டில் வெங்காய உற்பத்தி அதிகரித்து உள்ளதால், வெங்காயம் ஏற்றுமதிக்கான கட்டுபாட்டை மத்திய அரசு முற்றிலும் நீக்கியுள்ளது. உள்நாட்டில் கடந்த மாதம் வெங்காய விலை அதிகரித்தது. இதனால் விவசாயிகள் ஓரளவு லாபம் அடைந்தனர். உள்நாட்டில் விலை உயர்ந்ததால் வெளிநாடுகளுக்கு வெங்காய நிறுவனங்களால் அதிக அளவில் ஏற்றுமதி செய்ய முடியவில்லை. இதற்கு தீர்வு காணும் வகையில், குறைந்தபட்ச ஏற்றுமதி விலை கட்டுப்பாடு ஜூலை 2-ந் தேதி வரை நீக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில் கடந்த 2011-12-ஆம் நிதி ஆண்டில் உள்நாட்டில் வெங்காயம் உற்பத்தி 4 சதவீதம் அதிகரித்து 1.51 கோடி டன்னிலிருந்து 1.57 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. மேலும் ஏற்றுமதி 15 சதவீதம் அதிகரித்து 13.40 லட்சம் டன்னிலிருந்து 15.48 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இதனால் ஏற்றுமதிக்கான முழு கட்டுப்பாட்டையும் மத்திய அரசு தற்போது முற்றிலும் நீக்கியுள்ளது. இதன்மூலம் இனி வெங்காயத்தை தாராளமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும்.

## ரூபாய் மதிப்பு சரிவால் எண்ணெய், பருப்பு விலை கிடு கிடு

ஜூலை 01,2012,02:36



சேலம்,:அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாய் வெளி மதிப்பு தொடர்ந்து சரிவடைந்து வருவதால், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும், பருப்பு, எண்ணெய் விலையில் உயர்வு ஏற்பட்டு உள்ளது.ம@லசியா:தமிழகத்துக்கு தேவையான பருப்பு, எண்ணெய், பாதம், பிஸ்தா

ஆகியன வடமாநிலங்களில் இருந்து விற்பனைக்கு கொண்டு வரும் நிலையில், வடமாநிலங்களுக்கு மலேசியா, தாய்லாந்து, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து விற்பனைக்கு வருகிறது.

ஜூன் மாதத்தில் மட்டும் துவரம் பருப்பு குவிண்டாலுக்கு, 1,200 ரூபாய் வரை விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. மொத்த விலையில் கடந்த மாதம், 6,200 ரூபாய்க்கு விற்றது, நேற்று குவிண்டால், 7,400 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 5,800 ரூபாய்க்கு விற்றது, 7,000 ரூபாய்க்கும், மூன்றாம் ரகம் குவிண்டால், 5,500 ரூபாய்க்கு விற்றது, 6,500 ரூபாய்க்கு விற்கிறது.

மொத்த விலையில் ஏற்பட்ட உயர்வை அடுத்து, சில்லரை விலையில் ஒரு கிலோ, முதல் ரகம், 77 ரூபாயாகவும், இரண்டாம் ரகம், 74 ரூபாயாகவும், மூன்றாம் ரகம், 70 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

பருப்பு விலை உயர்வை தொடர்ந்து எண்ணெய் விலையிலும் உயர்வு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் சூரிய காந்தி எண்ணெய் லிட்டர், 78 ரூபாய்க்கு விற்றது, நேற்று, 83 ரூபாய்க்கு விற்கிறது. பாமாயில் எண்ணெய் விலையில் லிட்டருக்கு மூன்று ரூபாய் உயர்வு ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் வரை, லிட்டர், 59 ரூபாய்க்கு விற்றது, நேற்று லிட்டர், 62 ரூபாய்க்கு விற்கிறது. உள்நாட்டில் எண்ணெய் உற்பத்தி எதிர்பார்த்த அளவு இல்லாததால், அதன் விலை மேலும் அதிகரிக்கும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

தமிழகம்:சேலம் பருப்பு வியாபாரி குமரேசன் கூறியதாவது:பர்மாவில் இருந்து பருப்பை கொள்முதல் செய்யும் வியாபாரிகள், டாலர் மதிப்பு வீழ்ச்சியை காரணம் காட்டி, தொடர்ந்து பருப்பு விலையை அதிகரித்து வருகின்றனர். அவர்களுடன் சின்டிகெட் அமைத்துக் கொண்ட மகாராஷ்டிரா வியாபாரிகள், துவரையின் விற்பனையை நிறுத்தி விட்டனர்.

தமிழகத்தில் துவரம் பருப்பு விலை கடந்த மாதத்தை ஒப்பிடுகையில் குவின்டாலுக்கு, 1,200 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. தமிழக அரசு பொது வினியோக திட்டத்துக்கு, இன்னும் சில வாரங்களில் பருப்பை கொள்முதல் செய்யும் என்ற தகவல் பரவி வருகிறது. பருப்பை அரசு கொள்முதல் செய்யும் பட்சத்தில், இதன் விலை மேலும் உயரும். இவ்வாறு குமரேசன் கூறினார்.

### ஜனவரி - ஏப்ரல் மாதத்தில் தேயிலை உற்பத்தி 14 சதவீதம் சரிவு

ஜூலை 01,2012,02:33



கோல்கட்டா:நடப்பாண்டின் ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான, நான்கு மாத காலத்தில், நாட்டின் தேயிலை உற்பத்தி, 14 சதவீதம் குறைந்துள்ளதாக, இந்திய தேயிலை உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச அளவில், தேயிலை உற்பத்தி மற்றும் பயன்பாட்டில், இந்தியாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. அசாம், மேற்கு வங்கம் போன்ற வட மாநிலங்களிலும், கர்நாடகா, தமிழகம், கேரளா உள்ளிட்ட தென் மாநிலங்களிலும், அதிகளவு தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது.

நடப்பாண்டின் முதல் நான்கு மாதங்களில், தேயிலை உற்பத்தி, 14.30 கோடி கிலோ என்றளவில் குறைந்துள்ளது. இது, முந்தைய ஆண்டின் இதே காலத்தில், மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை விட, 14 சதவீதம் (16.80 கோடி கிலோ) குறைவாகும்.மதிப்பீட்டு காலத்தில், மேற்கு வங்கம் மற்றும் அசாம் மாநிலங்களின் தேயிலை உற்பத்தி, 17 சதவீதம் சரிவடைந்துள்ளது.

தென் மாநிலங்களிலும், இதன் உற்பத்தி, 11 சதவீதம் என்றளவில் குறைந்துள்ளது. இதனால் தான், ஒட்டுமொத்த அளவில், நாட்டின் தேயிலை உற்பத்தி குறைந்துள்ளது.மேலும், கென்யா மற்றும் இலங்கையில் தேயிலை உற்பத்தி குறைந்ததை அடுத்து, சர்வதேச அளவிலும், இதன் உற்பத்தி, 12 சதவீதம் குறைந்துள்ளதாக, இக்கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

## அதிக உற்பத்தி: வெற்றிலை விலை வீழ்ச்சி

ஜூலை 01,2012,02:32



கிருஷ்ணகிரி:கிருஷ்ணகிரி பகுதியில், வெற்றிலை விளைச்சல் அதிகரித்துள்ளதால், அதன் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பெரியமுத்தூர், சின்னமுத்தூர், சிந்தகம்பள்ளி உள்ளிட்ட மாவட்டத்தில், ஒருசில பகுதிகளில் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இது குறித்து, பெரியமுத்தூரை சேர்ந்த வெற்றிலை விவசாயி சீனிராஜ் கூறியது:கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வெற்றிலை சாகுபடி பரப்பளவு 75 ஏக்கராக குறைந்துள்ளது. கோடையில், வெற்றிலை வரத்து அதிகமாக இருக்கும். அதனால் அதன் விலை குறைந்திருக்கும். நடப்பாண்டு, கோடை மழை மற்றும் தென்மேற்கு பருவமழை சரிவர பெய்யாததால், வெயிலின் தாக்கம் தொடர்ந்து நீடிக்கிறது. இதனால் வெற்றிலை வரத்து அதிகரித்து, அதன் விலை குறைந்துள்ளது. இதனால் வெற்றிலை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது, 100 வெள்ளை வெற்றிலைகள் கொண்ட ஒரு கட்டை, 15 ரூபாய்க்கும், கறுப்பு வெற்றிலையை, 20 ரூபாய்க்கும் வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். மழை காலம் துவங்கும் போது, வெற்றிலை வரத்து குறைந்து, விலை உயரும். இவ்வாறு அவர் கூறினார்.

## அட்மா திட்டத்தின் கீழ் புத்தாக்கப்பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,02:40 IST

ராசிபுரம்: அட்மா திட்டத்தின் கீழ், தனியார் விதை விற்பனையாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி, நாமக்கல் யூனியன் அலுவலக கூட்ட அரங்கில் நடந்தது.விதை ஆய்வாளர் கவுதமன் வரவேற்றார். விதை ஆய்வு துணை இயக்கனர் சவுந்தரராஜன் தலைமை வகித்து பேசும்போது,""தரமான விதைகளை விற்பனை செய்வது விற்பனையாளர் கடமை. அந்த விதைகளை, சட்டத்துக்கு உட்பட்டு வினியோகம் செய்ய வேண்டும். விதைகள் சட்டத்தை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார்.

விதைச் சான்று உதவி இயக்குனர் சுப்ரமணியம், சான்று விதைகள் உற்பத்தி மற்றும் அதன் அவசியம் பற்றியும், விதை ஆய்வாளர்கள் சுப்ரமணி, விதை சட்ட அமலாக்கம் மற்றும் சட்ட விதிமுறைகள் குறித்தும் விளக்கினர். மேலும், பதிவேடுகள் மற்றும் கொள்முதல் ஆதாரங்கள் பராமரித்தல், விற்பனை பட்டியல் வழங்குவது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

வட்டார வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு) செல்வி, விதை ஆய்வாளர் ராஜேந்திரன், உதவி விதை அலுவலர் சேகர், விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் மஞ்சள் கொள்முதல்**

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,02:40 IST

நாமக்கல்: ""நாமக்கல், திருச்செங்கோடு, ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், மஞ்சள் கொள்முதல் செய்யப்படும்,'' என, தொழில் துறை அமைச்சர் தங்மணி பேசினார்.

நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், தமிழக அரசின் சந்தை குறுக்கீட்டு திட்டத்தின் மஞ்சள் கொள்முதல் துவக்க விழா நடந்தது. மாவட்ட கலெக்டர் குமரகுருபரன் தலைமை வகித்தார். அமைச்சர் தங்கமணி, மஞ்சள் கொள்முதலை துவக்கி வைத்து பேசியதாவது:விவசாயிகள் உற்பத்தி செய்யும் மஞ்சளுக்கு கட்டுப்படியான விலை கிடைக்கும் வகையில், மஞசள் கொள்முதல் திட்டத்தை, அரசு அறிவித்துள்ளது. அதன் அடிப்படையில், சராசரி தரம் கொண்ட ஒரு குவிண்டால் மஞ்சளுக்கு, 4,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்டத்தை பொறுத்தவரை, நாமக்கல், திருச்செங்கோடு, ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், மஞ்சள் கொள்முதல் செய்யப்படும். மஞ்சள் இருப்பு வைத்துள்ள விவசாயிகள், சம்மந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை துறை அலுவலரிடம் அடையாள அட்டை பெற்று, வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில், மஞ்சளை விற்பனை செய்யலாம்.

அதன்படி, நாமக்கல், சேலம், ஈரோடு மாவட்டங்களில், மஞ்சள் கொள்முதல் செய்யப்பட உள்ளது. சொட்டுநீர் பாசனத்திற்கு மானியம் வழங்குதல், வேளாண் கருவிகள் மானியத்தில் வழங்குதல், உழவர் தின விழாவை நடத்தி, வேளாண்துறையின் திட்டங்களை எடுத்துக் கூறியதன் மூலம்

விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.இவ்வாறு அவர் பேசினார்.

நாமக்கல் எம்.எல்.ஏ., பாஸ்கர், நகராட்சி சேர்மன் கரிகாலன், கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர் சீனிவாசன், துணைப்பதிவாளர்கள் தனலட்சுமி, எழிலரசி, மானோன்மணி, ஆதிநாயகி உட்பட பலர் பங்கேற்றனர்.

## மஞ்சள் நடவுக்கு நவீன இயந்திரம் பட்டதாரி விவசாயி புது சாதனை

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,02:21 IST

சேந்தமங்கலம்: மஞ்சள் நடவு செய்வதற்கு நவீன இயந்திரத்தை வடிவமைத்து, பட்டதாரி விவசாயி ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

சேந்தமங்கலம் அடுத்த கார்கூடல்பட்டி பஞ்சாயத்து, ஒன்பதாம் பாலிக்காட்டை சேர்ந்தவர் விவசாயி அசோக்குமார் (36). பி.ஏ., ஆங்கிலம் முடித்த அவர், தனது தந்தையின் தூண்டுதலின் பேரில், மூன்று மாத போராட்டத்துக்கு பின், மஞ்சள் பயிரிடும் இயந்திரத்தை கண்டுபிடித்தார். தற்போது, விவசாயத்துக்கு தேவையான ஆட்கள் கிடைக்காத நிலையில், குறிப்பிட்ட காலத்தில் பயிர்களை சாகுபடி செய்வதற்கு விவசாயிகள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், ஆள் பற்றாக்குறையை கருத்தில் கொண்டும், புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில், நவீன மஞ்சள் நடவு இயந்திரத்தை கண்டுபிடித்துள்ளார்.

ஒரு ஏக்கர் மஞ்சள் நடவுக்கு, எட்டு ஆட்கள் தேவைப்படும். அதற்கான கூலி ஒரு நாளைக்கு, 6,200 ரூபாய் செலவாகிறது. அதுவே, இந்த நவீன இயந்திரத்தில் நடவு பணி மேற்கொண்டால், நான்கு மணி நேரத்தில் நடவு செய்துவிடலாம். மேலும், 2,400 ரூபாய் மட்டுமே செலவாகிறது.

ஆட்கள் மூலம் ஒரு ஏக்கருக்கு மஞ்சள் நடவு செய்ய, 750 முதல், 1,000 கிலோ வரை மஞ்சள் தேவைப்படும். ஆனால், இயந்திரத்தில் நடவு செய்யும்போது, ஒரு டன் மஞ்சள் தேவைப்படுகிறது. இந்த மஞ்சள் நடவு இயந்திரத்தின் எடை, 230 கிலோ. மினி டிராக்டரின் உதவியுடன் மஞ்சள் நடவு இயந்திரத்தை இணைத்து தயார் செய்துள்ளார்.

இது குறித்து விவசாயி அசோக்குமார் கூறியதாவது: தற்போது, ஆள் பற்றாக்குறையால் விவசாயிகள் வயலில் நடவு பணியை மேற்கொள்ள முடியாமல் தடுமாறுகின்றனர். குறிப்பாக, மஞ்சள் நடவு பணிக்கு ஏதாவது ஒன்றை கண்டுபிடிக்க வேண்டும் என தீர்மானித்தேன். அதனால், ஒரு மினி டிராக்டரில் மஞ்சள் நடவு இயந்திரத்தை பொருத்தி வடிவமைக்கப்பட்டது.

ஒரு நாளைக்கு ஆட்களுக்கு கூலியாக வழங்கும் தொகையை விட பாதி அளவே செலவாகிறது. நேரமும் மிச்சமாவதுடன், செலவும் மிச்சமாவதால், ஏராளமான விவசாயிகள், இந்த நவீன இயந்திரத்தை பயன்படுத்தி வருகின்றனர். வரும் காலத்தில் கூடுதலாக தயார் செய்து விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## நெல் வரத்து தொடர்ந்து குறைவால் அரிசி விலை உயர்வு

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,04:48 IST

கோபிசெட்டிபாளையம்: பாசனத்துக்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் அரிசி ஆலைகளுக்கான நெல் வரத்து குறைந்துள்ளது. நெல் வரத்து குறைவால் அரிசி விலை மூட்டைக்கு, 250 முதல், 300 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் இருந்து 60 சதவீதமும், ஈரோடு, கரூர், நாமக்கல் போன்ற பகுதியில் 30 சதவீதம் நெல் உற்பத்தியாகிறது. தஞ்சையில் இருந்து ஐ.ஆர்.20, அதிசய பொன்னி மற்றும் பி.பீ.டி. ரகம் உற்பத்தியாகிறது. மீதமுள்ள, 10 சதவீதம் கர்நாடக, ஆந்திரா மாநிலத்தில் இருந்து கொள்முதலாகிறது.

புதிய அரிசியைவிட பழைய அரிசி உணவுக்கும், அதிக நேரம் கெடாமலும் இருப்பதால் மக்கள் பழைய அரிசியை விரும்பி வாங்குவர். அரிசிக்கு கிராக்கி ஏற்படும்போது, அரிசி ஆலைகளில் நெல் மூட்டைகளை இருப்பு வைக்க துவங்கி விடுகின்றனர். இருப்பு வைக்கப்படும் நெல் மூட்டைகள், சில மாதங்கள் கழித்து அரிசியாக்கப்படுகிறது.

நடப்பாண்டு ஜனவரி முதல் மார்ச் வரை நெல் அறுவடை நடந்ததால் புதிய அரிசி வரத்து அதிகமாக இருந்தது. அரிசி விலை சற்று குறைவாக இருந்தது. கடந்த ஒரு மாதமாக தமிழகத்தில் உள்ள அனைத்து அரிசி ஆலைகளுக்கு நெல் வரத்து குறைந்துள்ளது. மேட்டூரில் இருந்து டெல்டாவுக்கு தண்ணீர் திறப்பு இல்லாததாலும், பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வீழ்ச்சியால் ஈரோடு மாவட்டத்தில் பாசனங்களுக்கு தண்ணீர் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது. இதனால், நெல் உற்பத்தி குறையும் என வியாபாரிகள் கணிக்கின்றனர். அரிசி ஆலைகளில் உள்ள நெல் மூட்டைகளை இருப்பு வைக்க துவங்குகின்றனர். இதனால், அரிசி விலை மூட்டைக்கு 250 முதல் 300 ரூபாய் வரை உயர்ந்து, மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரிசி வியாபாரி கூறியதாவது: ஐ.ஆர்., 20, பொன்னி, அதிசய பொன்னி, டீலக்ஸ் பொன்னி, கல்லமுத்தான் இட்லி அரிசி, சி.ஆர். 1009 இட்லி அரிசி ஆகியவற்றை மக்கள் அதிகமாக வாங்குவர். புதிய ஏ.டீ.டி.,36 ரக அரிசியை அதிகமாக யாரும் வாங்குவதில்லை. பாசுமதி மற்றும் ஜீரகசம்பா அரிசியின் விலை அதிகமாவதால், விஷேசங்களுக்கு மட்டும் இதை பயன்படுத்துவர். இந்த ரக அரிசியை சில்லரையாகவே வாங்கிச் செல்கின்றனர்.

கடந்த, 3 மாதத்துக்கு முன் ஐ.ஆர்.20 ரக அரிசி 75 கிலோ மூடை, 1,350 முதல், 1,400 ரூபாய், அதிசய பொன்னி, டீலக்ஸ் பொன்னி போன்ற சன்ன ரகம், 75 கிலோ மூட்டை, 2,600 முதல், 2,700 ரூபாய் வரை விற்பனையானது. அரசி வரத்து குறைந்ததால், மோட்டா ரக அரிசி, 75 கிலோ மூட்டை, 1,700 முதல், 1,800 ரூபாய் வரையும், சன்னரக அரிசி, 75 கிலோ மூட்டை, 2,900 முதல் 3,000 ரூபாய் வரை விற்பனையாகிறது. வரும் நாட்களில் பழைய அரிசியின் விலை குறைய வாய்ப்பில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

**குன்னூர் தேயிலை ஏல விலையில் சரிவு**

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,01:24 IST

குன்னூர் : குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கம் சார்பில் நடந்த 26வது ஏலத்தில், 21.14 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது; 5 ரூபாய் சரிவு ஏற்பட்டது.
இதில் இலை ரகம் 15.54 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 5.60 லட்சம் கிலோவும் அடங்கும்.
இந்த ஏலத்தில் ரஷ்யா மற்றும் பாகிஸ்தான் வர்த்தகர்கள் கலந்து கொண்டனர். உள்ளூர் வர்த்தகம் சுமாராக இருந்தது.
இதில், 16 லட்சத்து 6 ஆயிரத்து 640 கிலோ தேயிலை தூள் விற்பனையானது.
சாதாரண இலை ரகத்துக்கு சராசரியாக ஒரு கிலோவுக்கு 60-64 ரூபாய் வரையிலும், உயர் ரகம் 100 ரூபாய் முதல் ரூபாய் 130 வரையிலும் விலை கிடைத்தது.
சாதாரண டஸ்ட் ரகத்துக்கு 63 ரூபாய் முதல் ரூபாய் 67 வரையிலும், உயர் ரகத்துக்கு 105 ரூபாய் முதல் 127 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது.
அதிகபட்சமாக ஹோம்டேல் எஸ்டேட் சி.டி.சி., டஸ்ட் ரக தேயிலை தூள் ஒரு கிலோ 156 ரூபாய்க்கு விற்பனையானது.
சாம்ராஜ் எஸ்டேட் ஆர்தடக்ஸ் ரக தேயிலை அதிகபட்சமாக ஒரு கிலோ 208 ரூபாய்க்கு விற்பனையானது.
இந்த வாரம் 76 சதவீத தேயிலை தூள் விற்பனையாகியுள்ளது. கடந்த வாரம் தேயிலை விலையில் 5 ரூபாய் சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில்,வரும் வியாழன் மற்றும் வெள்ளி கிழமை நடக்கும் 27வது ஏலத்தில் 20.91 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.
இதில், இலை ரகம் 15.55 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 5.36 லட்சம் கிலோவும் அடங்கும்.

## ஆவின் நிறுவனத்தில் புதிய பானம்

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,01:24 IST

ஊட்டி : ஊட்டி ஆவின் நிறுவனத்தின் சார்பில் புதிய பானம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் (ஆவின்) 98 கிராமங்களை சேர்ந்த பால் உற்பத்தியாளர் சங்கங்கள் இணைக்கப்பட்டு, 37 ஆயிரம் சிறு விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர்.

"ஆவின்' நிறுவனம் மூலம் நெய், வெண்ணெய், பாலாடைக்கட்டி, பால் கோவா, பன்னீர், சுவை ஊட்டப்பட்ட பால், தயிர் போன்றவை தயாரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன.முதன் முறையாக மிக குறைந்த அளவு கொழுப்பு சத்து, அதிகளவு புரதச்சத்து மற்றும் தாது உப்புகள் கொண்ட பானம், 'ஸ்போர்டி' என்ற பெயரில் தயாரிக்கப்பட்டுள்ளது;

200 மி.லி., பாட்டில், 12 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதை, மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக், அறிமுகப்படுத்தி, முதல் விற்பனையை துவக்கி வைத்தார். இதை தவிர, 5 லிட்டர் நெய் விற்பனையையும் துவக்கி வைத்து கலெக்டர் பேசுகையில்,"ஆவின் பொருட்கள் நல்ல தரத்துடன், சுகாதார முறையில் தயாரிக்கப்படுகின்றன," என்றார்.

## மலர் சாகுபடி தொழிலில் மீண்டும் கிளம்பியது சர்ச்சை!

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,01:10 IST

ஊட்டி : "நீலகிரி மாவட்டத்தில் மலர் சாகுபடி தொழிலை தொடர முடியாமல் கைவிட்ட விவசாயிகளிடம் இருந்து பசுமைக் குடில்களை வாங்கி, பினாமி பெயரில் அரசின் மானிய உதவிகள் வாங்கப்படுகின்றன' என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.
கடந்த 10 ஆண்டுக்கு முன் நீலகிரியில் தேயிலை தொழில் நலிவடைந்த காலத்தில், அப்போதைய அ.தி.மு.க., அரசு கொய்மலர் சாகுபடியை அறிமுகப்படுத்தியது. மானியம், வங்கி கடன் உதவி என விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டதால், 500க்கும் மேற்பட்ட சிறு விவசாயிகள் மலர்

சாகுபடியில் ஈடுபட்டனர். பெரிய சாகுபடியாளர்கள் பலர் தொழிலை தொடர, தரமற்ற நாற்று, மார்க்கெட்டிங் வசதியின்மை உட்பட காரணங்களை முன்வைத்து சிறு மலர் சாகுபடியாளர்கள் பலர் தொழிலை கைவிட்டனர்.

ஊழல் அதிகாரிகள் மீது புகார்

நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி சிறு விவசாயிகள் சங்க தலைவர் விஸ்வநாதன், மாநில முதல்வருக்கு அனுப்பியுள்ள மனு:

வங்கி கடன் உதவியுடன் துவக்கத்தில் சிறப்பாக இருந்த மலர் சாகுபடி தொழில் தற்போது நலிவடைய துவங்கியுள்ளது.

நாற்று கம்பெனிகளால் வினியோகம் செய்யப்பட்ட மலர் நாற்றுகள் தரமற்றவையாக இருந்ததால், மூன்று ஆண்டுக்கு மகசூல் தர வேண்டிய செடிகள் ஓராண்டிலேயே அழுகிவிட்டன.

அடிக்கடி காற்று வீசும் நீலகிரியில், பசுமைக் குடில்கள் அடிக்கடி சேதமடைந்தன. எந்தவொரு இன்சூரன்ஸ் கம்பெனிகளும் பசுமைக் குடில்களை இன்சூரன்ஸ் செய்ய முன்வருவதில்லை.

ஊட்டியில், அ.தி.மு.க., ஆட்சியில் துவங்கப்பட்ட மலர் ஏல மையம் சில ஊழல் அதிகாரிகளின் நிர்வாக திறமையின்மையால் மூடப்பட்டு விட்டது; இதனால், மலர்களை சந்தைப்படுத்த முடியவில்லை.

உரம், பூச்சி கொல்லி மருந்துகளின் விலை பன்மடங்கு உயர்ந்துவிட்ட நிலையில், அதற்கேற்ப மலர்களுக்கு விலை கிடைப்பதில்லை. பசுமைக் குடில்களுக்கு மானியம் பெறும் போது, சில தோட்டக்கலை துறை அதிகாரிகள் கமிஷன் கேட்டு, காலதாமதம் செய்கின்றனர். ஊழல் அதிகாரிகள் குறித்து சம்மந்தப்பட்ட துறைக்கு பல முறை புகார் அளித்தும் பலனில்லை. இதனால், வாங்கிய வங்கி கடனை திருப்பி செலுத்த முடியாமல் உள்ளோம்.இவ்வாறு, விசுவநாதன் கூறியுள்ளார்.

## மழை காலத்தில் வெள்ள தேக்கம்

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,01:24 IST

பந்தலூர் : பந்தலூர் பஜார் பகுதியில் மழை காலங்களில், வெள்ளம் சாலையில் தேங்குவதால் சிரமம் ஏற்படுகிறது.

பந்தலூர் பஜார், தாசில்தார் அலுவலக சாலைகளில் போதுமான கழிவு நீர் கால்வாய் இல்லை. இப்பகுதிகளில் உள்ள கால்வாய்களையும் சீரமைக்காததால், மழை காலத்தில், வெள்ளம் பஜாரை சூழ்ந்து விடுகிறது.

பஜாரில் சாலையின் குறுக்காக இருந்த கழிவு நீர் கால்வாய், தனியார் ஒருவர் மூலம்

ஆக்கிரமிக்கப்பட்டு, கட்டடமாக மாறியுள்ளதால் கழிவு நீர் செல்ல வழியில்லாமல் தேங்கி நிற்கிறது. பஸ் நிறுத்துமிடத்தில் உள்ள கால்வாய் தூர்வாரி சீரமைக்காததால், கழிவு நீர் தேங்கி நின்று சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்துகிறது.
"இதற்கு தீர்வு காண வேண்டிய துப்புரவு அதிகாரிகள் சரியாக பணிக்கு வருவதில்லை; கள ஆய்வும் செய்வதில்லை,' என்பதும் மக்களின் குற்றச்சாட்டாக உள்ளது. எனவே, கழிவு நீர் கால்வாய்களை தூர்வாரி சுத்தப்படுத்தவும், ஆக்கிரமிப்புகளை அகற்றவும், புதிதாக கால்வாய் அமைக்கவும் நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாகம் முன்வரவேண்டும்.

## வேளாண் தொழில்நுட்ப பயிற்சி 100 விவசாயிகள் பங்கேற்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,04:15 IST

உடையார்பாளையம்: உடையார்பாளையத்தில் வேளாண் தொழில்நுட்ப பயிற்சி நடந்தது. பயிற்சிக்கு டவுன் பஞ்சாயத்து தலைவர் பானுமதி தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் கலைசெல்வி வரவேற்றார். சோழமாதேவி 'கிரீடு' வேளாண் அறிவியல் நிலைய அலுவலர் ராஜ்கலா, முந்திரி சாகுபடி, பயிர்பாதுகாப்பு, நீர்வளம் ஆகியவை பற்றி பேசினார். பட்டு புழு வளர்ப்பு பற்றி குறும்படத்தின் மூலம் உலகநாதன் விளக்கி பேசினார்.
வேளாண்மை பொறியியல் துறை இளநிலைய பொறியாளர் கலைமணி, விவசாய கருவிகள் மான்யம், விவசாய பணியில் இயந்திரமாக்கல் பற்றி விளக்கினார். கால்நடை உதவி டாக்டர் புகழேந்தி ஆடுவளர்ப்பு மற்றும் திட்டங்கள் குறித்து கூறினார். பயிற்சியில் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். ஏற்பாடுகளை 'அட்மா' தொழில்நுட்ப அலுவலர்கள் முருகன், சவுந்தரராஜன் ஆகியோர் செய்திருந்தனர். ஜெயங்கொண்டம் உதவி வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

## வேளாண் கல்லூரி மாணவருக்கு மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,04:34 IST

துறையூர்: துறையூர் அருகேயுள்ள ஒட்டம்பட்டிபுதூர் கிராமத்தில், திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவர்கள் மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சியில் ஈடுபட்டனர்.திருச்சி நவலூர் குட்டப்பட்டு அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரியில் நான்காம் ஆண்டு மாணவர்களுக்கு கிராம வேளாண்மை அனுபவ பயிற்சி மற்றும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பயிற்சிகள் நடந்து வருகிறது. இப்பயிற்சி கடந்த மாதம் 15ம் தேதி முதல் 30ம் தேதி வரை நடந்தது.

முகாமில் துறையூர் வட்டாரத்தில் உள்ள ஒட்டம்பட்டிபுதூர் கிராமத்தில் மண்புழு உரம் தயாரிக்கும் தங்கராஜ் விவசாயி உதவியுடன், மண்புழு உர தயாரிப்பு பயிற்சியில் மாணவர்கள் ஈடுபட்டனர். துறையூர் வட்டாரம் ஒட்டம்பட்டி புதூர் கிராமத்தில் தங்கராஜ் என்ற விவசாயி இந்த பஞ்சகாவியா மற்றும் இயற்கை பூச்சிவிரட்டி, அமிர்த கரைசல் குறித்தும் மாணவர்களுக்கு விளக்கினார். நிகழ்ச்சியின் போது உதவி வேளாண் அலுவலர் ஜான்ஜெயக்குமார் உடனிருந்தார்.

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,04:28 IST

கரூர்: இந்திய பயிர்பதன தொழில் நுட்பக்கழகம் சார்பில் வரவணையில் விவசாயிகளுக்கான மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் பற்றிய பயிற்சி முகாம் நடந்தது. முகாமில் தொழில்நுட்பக்கழக விஞ்ஞானிகள் தினேஷ் பாபு, விக்னேஷ் ஆகியோர், ஜாம், ஜெல்லி, ஸ்குவாஷ் பொருட்கள் குறித்த செயல் விளக்கம், பொருளின் முக்கியத்துவம், சந்தை விபரம், விளைபொருட்களின் குழு அமைப்பு குறித்து விவசாயிகள் பயிற்சி அளித்தனர். குளித்தலை வேளாண்மை வணிக அலுவலர் அர்ச்சுணன், உதவி அலுவலர் சதீஸ்குமார் உள்பட 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

## செடியால் வாய்க்காலுக்கு சிக்கல் தூர்வார விவசாயிகள் கோரிக்கை

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,04:28 IST

குளித்தலை: "செடி, கொடிகளால் தண்ணீர் தேக்கம் அடையும் குளித்தலை கொடிங்கால் வடிகால் வாய்க்காலை உடனடியாக தூர் வாரவேண்டும்' என்று விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கரூர் மாவட்டம் குளித்தலை அருகே வீரவள்ளி கட்டளை மேட்டு வாய்க்காலில் இருந்து கண்டியூர், வதியம், கோட்டமேடு, வாலாந்தூர், மேட்டுமருதூர், குமாரமங்கலம், தேவஸ்தானம், தோகைகரை வரை கொடிங்கால் வடிகால் வாய்க்கால் உள்ளது. கட்டளை மேட்டு வாய்க்காலில் இருந்து பிரிவுப் பாசன கன்னாறு மூலம் வரும் தண்ணீர், விவசாய பாசனத்துக்கு போக மீதி தண்ணீர் அனைத்தும் கொடிங்கால் வடிகால் வாய்க்காலில் இணைகிறது.

இதேபோல தென்கரை பாசன வாய்க்காலில் இருந்து குளித்தலை, தண்ணீர்பள்ளி, ராஜேந்திரம், மருதூர், வீரம்பூர் கிராமத்தில் உள்ள விவசாயத்துக்கு வரும் தண்ணீர் கொடிங்கால் வடிகால்

வாய்க்காலில் கலக்கிறது. கொடிங்கால் வாய்க்கால் பெட்டவாய்த்தலையில் தென்கரை பாசன வாய்க்காலுடன் இணைந்து காவிரி ஆற்றுடன் ஒன்று சேருகிறது. 50க்கும் மேற்பட்ட கிராமங்களின் விவசாயத்துக்கு கொடிங்கால் வாய்க்கால் முக்கிய பங்கு வகிக்கிறது.

இவ்வாய்க்காலின் நிலை தற்போது பரிதாபமாக உள்ளது. வாலாந்தூர், பரளி, மேட்டுமருதூர், குமாரமங்கலம், தேவஸ்தானம் தோகைகரை வரை செடி, கொடிகள் வளர்ந்து தண்ணீர் வடிய முடியாமல் தேக்கம் ஏற்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு மிகவும் முக்கியமான கொடிங்கால் வடிகால் வாய்க்கால் தூர்வாரினால் 50க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன்பெறும். இப்பகுதி விவசாயிகள் கொடிங்கால் வடிகால் வாய்காலை உடனடியாக தூர்வார வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

## ஆடிப்பட்டத்தில் சின்ன வெங்காய சாகுபடி தகவல் மையம் விவசாயிகளுக்கு 'அட்வைஸ்'

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,04:28 IST

கரூர்: "ஆடிப்பட்டத்தில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்தால், அறுவடையின் போது விவசாயிகள் அதிக லாபம் பெறலாம்' என, உள்நாட்டு சந்தை மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மைய இயக்குனர் அஜ்ஜன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:தமிழகத்தில் ஆடிப்பட்டத்தில் மானாவாரி பயிர்களை சாகுபடி செய்வது வழக்கமாக நடந்து வருகிறது. தென்மேற்கு பருவமழை மானாவரி பயிர்களின் உற்பத்தியை தீர்மானிக்கிறது. நடப்பாண்டு பருவமழை இயல்பாக இருக்கும் என வானிலை மையம் அறிவித்துள்ளது. கடந்த 2011ம் ஆண்டை விட, நடப்பாண்டு சின்ன வெங்காய உற்பத்தி அதிகளவில் இருக்கும் என வியாபாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

நடப்பாண்டு ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை ஒரு கிலோவுக்கு ஏழு ரூபாய் முதல் 12 ரூபாய் என இருந்தது. கடந்த மாதத்தில் வெளிநாடுகளுக்கு சின்ன வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டதால், பண்ணை விலை சற்று உயர்ந்தது. சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை ஒரு கிலோவுக்கு 19 ரூபாய் முதல் 22 ரூபாய் வரையிலும், நடவு காயின் விலை ஒரு கிலோவுக்கு 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரையிலும் உள்ளது.

வரும் செப்டம்பர், அக்டோபர் மாதங்களுக்காக சந்தையில் விற்பனை செய்ய ஆடிப்பட்டத்தில்

சின்ன வெங்காயத்தை நடவு செய்யலாமா அல்லது வேண்டாமா என்ற மனநிலையில் விவசாயிகள் உள்ளனர். விலை ஆய்வுகளின்படி வரும் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை 15 ரூபாய் முதல் 18 ரூபாய் வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, விவசாயிகள் ஆடிப்பட்டத்தில் சின்ன வெங்காயத்தை சாகுபடி செய்யலாம்.

### விவசாயிகளுக்கு மழை கணிப்பு விளக்க கூட்டம்

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,04:15 IST

பெரம்பலூர்: பெரம்பலூர் அருகே உள்ள பூலாம்பாடியில் இயற்கை பகுப்பாய்வு மற்றும் மேகங்கள் ஆராய்ச்சி அமைப்பின் சார்பில் விவசாயிகளுக்கு மழையை முன்கூட்டியே கணிக்கும் முறை குறித்த விளக்க கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு பூலாம்பாடி டவுன் பஞ்சாயத்து தலைவர் செல்வலட்சுமி தலைமை வகித்தார். அரும்பாவூர் டவுன் பஞ்சாயத்து தலைவர் ராமசாமி, பூலாம்பாடி டவுன் பஞ்சாயத்து துணைத்தலைவர் மலர்கொடி, அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் கணேசன், திருவள்ளுவர் உழவர் மன்றத் தலைவர் வரதராசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் நீலகண்டன் இயற்கை வேளாண்மையும், விவசாயிகளின் பங்கும் என்ற தலைப்பில் இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம் குறித்தும், வரும் காலத்தில் விவசாயிகள் இயற்கை முறையில் விவசாயம் மேற்கொள்ளும் முறை குறித்தும் பேசினார்.கூட்டத்தில் இயற்கை பகுப்பாய்வு மற்றும் மேகங்கள் ஆராய்ச்சி அமைப்பின் தலைவர் மழை ராஜீ சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, விவசாயிகள் மழையை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் முறை குறித்தும், டவுன் பஞ்சாயத்துகளிலும், பஞ்சாயத்துகளிலும் எளிய முறையிலான மழைமானி அமைத்து மழை பெய்யும் நாள் மற்றும் அளவை தொடர்ந்து குறிப்பு எழுதி வருவதன் மூலம், வரும் காலத்தில் மழை பெய்யும் நாட்களை சரியாக கணித்து விவசாயம் மேற்கொள்ள உதவும் எனவும் தெரிவித்தார்.

இதில் முன்னாள் டவுன் பஞ்சாயத்து தலைவர் வேணுகோபால், டவுன் பஞ்சாயத்து கவுன்சிலர்கள் சாந்தி, செல்வராணி, சிலம்பரசி உட்பட விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

### முகூர்த்தம் இல்லாததால்சம்பங்கி விலையில் சரிவு

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,00:47 IST

திண்டுக்கல்:முகூர்த்த சீசன் இல்லாததால் சம்பங்கி விலை ஒரே நாளில் கிலோ ரூ.150 லிருந்து ரூ.20 ஆக குறைந்தது.திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் சம்பங்கி, மல்லிக்கு மட்டுமே தேவை அதிகமாக இருக்கும். முகூர்த்த நாட்களை முன்னிட்டு இவற்றின் விலை அதிகபட்சமாக கிலோ ரூ.400 ல் இருந்து ரூ.500 வரை விற்கப்படும். சீசன் இல்லாவிட்டாலும் வாசனை திரவியங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் மல்லி மற்றும் சம்பங்கியை மொத்தமாக வாங்கிச் செல்வார்கள். திண்டுக்கல்லில் பெரும்பாலான விவசாயிகள் சம்பங்கி, மல்லியை சாகுபடி செய்து வருகின்றனர்.முகூர்த்த சீசன் இல்லாததால் திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் நேற்று சம்பங்கி விலை கிலோ ரூ.150 லிருந்து ரூ.20 ஆக குறைந்தது. பிற பூக்களின் விலையில் மாற்றம் இல்லை. மல்லி ரூ.100 க்கும், அரளி ரூ.30 க்கும், முல்லை ரூ.70 க்கும், ரோஜா ரூ.30 க்கும், செண்டு ரூ.10 க்கும், கனகாம்பரம் ரூ.100 க்கும், கொழிகொண்டை ரூ.25 க்கும் விற்பனையானது.

## திராட்சை விளைச்சல் குறைவால் விலை அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,00:35 IST

திண்டுக்கல்:போதுமான மழை இல்லாததால் திராட்சை விளைச்சல் குறைந்து, அதிகபட்சமாக தற்போது கிலோ 60 ரூபாய்க்கு விற்பனையாகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் பஞ்சம்பட்டி, பிள்ளையார்நத்தம், ஊத்துப்பட்டி, சின்னாளபட்டி, மெட்டூர், அழகம்பட்டி பகுதிகளில் அதிகளவில் திராட்சை பயிரிரப்பட்டுள்ளது. தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதி அடுத்தபடியாக திண்டுக்கல் மாவட்டத்தில் திராட்சை அதிகப்படியாக பயிரிடப்படுகிறது. இந்த ஆண்டு போதிய மழை இல்லாததால், திராட்சை விளைச்சல் குறைந்துள்ளது. கேரள வியாபாரிகள் அதிகளவில் கம்பம் பகுதி மற்றும் திண்டுக்கல் சுற்றுப்புற பகுதிகளில் விளைந்துள்ள திராட்சைகளில் அதிகளவில் வாங்கிச்செல்கின்றனர். தேவை அதிகரித்துள்ளபட்சத்தில் விளைச்சல் குறைவாக இருப்பதால் விலை அதிகரித்துள்ளது. தோட்டத்தில் வியாபாரிகள் கிலோ 40 ரூபாய்க்கு வாங்குகின்றனர். போக்குவரத்து செலவு, பேக்கிங் செலவு ஆகியவற்றுடன் வியாபாரிகள் கேரளா மற்றும் சென்னையிலுள்ள கமிஷன் கடைகளுக்கு அனுப்புகின்றனர். உயர்வு: அங்கு கடைக்காரர்கள் மற்றும் சிறுவியாபாரிகள் வாங்கி, மக்களுக்கு விற்பனைக்கு வருகையில் கிலோ 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.தென்மேற்கு பருவமழை பெய்யத்துவங்கினால் தற்பொழுது பழுத்துள்ள திராட்சைகள் கொடியிலேயே சேதமடையவாய்ப்புள்ளது. இதனால் திராட்சை வரத்து குறையவாய்ப்புள்ளதால் விலை உயர வாய்ப்புள்ளது.

## தக்காளி விவசாயிகளுக்கு "ஜாக்பாட்'

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,02:23 IST

தேவாரம்:ஆந்திராவிலிருந்து வரத்தில்லாததால், தக்காளி ஒரு பெட்டி(15 கிலோ) 250 ரூபாய்க்கு விற்பனையாவதால், விவசாயிகளுக்கு "ஜாக்பாட்' அடித்துள்ளது.தேனி மாவட்டத்தில், கூடலூர், கம்பம், தேவாரம், ஆண்டிபட்டி, பெரியகுளம் பகுதியில் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் தக்காளி பயிரிடப்பட்டுள்ளது. சென்னை, திருச்சி, கேரளா பகுதிக்கு தேனி மாவட்ட தக்காளி அனுப்பப்படுகிறது. கடந்த வாரத்தில் ஒரு பெட்டி தக்காளி 150 ரூபாய்க்கும் குறைவாக விற்பனையானது. நேற்று, ஒரு பெட்டி தக்காளி 250 ரூபாய் வரை விற்பனையானது. தக்காளிக்கு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துஉள்ளனர்.
வியாபாரி வெங்கடேஷன் கூறியதாவது: ஆந்திராவிலிருந்து தக்காளி வரத்து குறைந்து விட்டது. சென்னை, பெங்களூரு பகுதியில் தக்காளி தேவை அதிகரித்துள்ளதால் விலை கூடியுள்ளது. இறவை பாசன நிலங்களில் தக்காளி விளைச்சல் நன்றாக உள்ளதால், தேவாரம் மார்க்கெட்டிற்கு நாள்தோறும் ஐந்து ஆயிரம் பெட்டி தக்காளி வரத்துள்ளது, என்றார்.

**பருத்தி, பஞ்சு விலை திடீர் உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,02:25 IST

தேனி:பருத்தி விலை கிலோ, நான்கு ரூபாய் வரையும், பஞ்சு விலை 12 ரூபாய் வரையும் உயர்ந்துள்ளதால், ஸ்பின்னிங், ஜின்னிங் மில்கள் தள்ளாட்டத்தில் உள்ளன. தமிழகத்தில், ஜூனில் தொடங்க வேண்டிய தென்மேற்கு பருவமழை, இதுவரை தலைகாட்டவில்லை. இதனால் பருத்தி விதைப்பு தாமதம் ஆகி வருகிறது. இதனால் சந்தைக்கு வருவதும் தாமதம் ஆகும். தற்போது பருத்தி கையிருப்பு அளவு குறைந்துள்ளது. இதனால் கிலோவிற்கு, நான்கு ரூபாய் வரை உயர்ந்துள்ளது.
முதல்ரக பருத்தி குவிண்டாலுக்கு (நூறு கிலோ) 4100 ரூபாயில் இருந்து 4500 ஆக உயர்ந்துள்ளது..
ஏற்கனவே கடன்சுமை, மின்கட்டண உயர்வு, மின்தட்டுப்பாடு, தொழில் முடக்கத்தால் பாதிக்கப்பட்டிருந்த ஜின்னிங், ஸ்பின்னிங் மில்கள், தற்போது பருத்தி, பஞ்சு விலை உயர்வால், மேலும் நெருக்கடியில் சிக்கி உள்ளன."பருத்தி, பஞ்சு விலையை கட்டுப்படுத்தவும், நூல் விலையை உயர்த்தவும், மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்,' என, ஸ்பின்னிங் மில் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கொப்பரை விலை உயர்வு விவசாயிகளுக்கு ஆறுதல்**

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,01:46 IST

கீழக்கரை:கொப்பரை விலை சற்று உயர்ந்ததால் தென்னை விவசாயிகள் ஆறுதல் அடைந்துள்ளனர்.ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை விவசாயம் செய்யப்படுகிறது. நடப்பாண்டில் தேங்காய் விளைச்சல் அமோகமாக உள்ளது. இருப்பினும் எதிர்பார்த்த விலை இல்லாததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர். இதனால் காய்களை பறிக்காமல் விவசாயிகள் மரத்தில் கிடப்பில் போட்டனர். எண்ணிக்கை அடிப்படையில் தேங்காய் விற்ற காலம் மாறி கூறு கட்டி விற்கும் நிலை இருந்தது.விவசாயிகள் கடந்த வாரம் வரை கொப்பரை கிலோ ரூ.32க்கு விற்பனை செய்தனர். வீழ்ச்சியால் பாதிப்பு அடைந்த தென்னை விவசாயிகள் தமிழகம் முழுவதும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதன் காரணமாக தற்போது கொப்பறை கிலோ 32லிருந்து ரூ.40க்கும்,தேங்காய் விலை கிலோ 9லிருந்து 11,50க்கும் உயர்ந்துள்ளது.பெரிய பட்டினம் தென்னை விவசாயி மாலிக் கூறியதாவது:தேங்காய் விலை சரிவு, உற்பத்தி செலவு அதிகரிப்பு காரணமாக ஏராளமான விவசாயிகள் மாற்றுத் தொழிலுக்கு சென்று விட்டனர். தற்போது ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பு விவசாயிகளுக்கு சற்று ஆறுதலை கொடுக்கலாமே தவிர பலன் கிடையாது.வெளிநாடுகளில் இருந்து கொப்பரை தேங்காய் இறக்குமதியை மத்திய அரசு தடை செய்ய வேண்டும், என்றார்.

## விதைகளுக்கு புறத்தூய்மை பரிசோதனை அவசியம்

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,04:15 IST

திருநெல்வேலி:"விதைகளுக்கு புறத்தூய்மை பரிசோதனை அவசியம்' என விதைப்பரிசோதனை அலுவலர் தெரிவித்தார்.நெல்லை விதைப்பரிசோதனை அலுவலர் முகமதுகாசிம் அறிக்கை:உற்பத்தி, விற்பனை செய்யப்படும் விதைகள் அதிக அளவு சுத்தத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். அறுவடை முடிந்து பிரித்து எடுக்கப்படும் விதைகள் சுத்திகரிப்பு செய்யப்பட்டு சுத்தமாக, பிற பொருட்கள் கலப்பு இன்றி இருக்க வேண்டும். விதைகளுக்கு புறத்தூய்மை பரிசோதனை அவசியம்.

நெல்லை விதைப்பரிசோதனை நிலையத்தில் புறத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. புறத்தூய்மை சோதனையின் போது தூய விதைகள், களை விதைகள், பிற ரக விதைகள், உயிர்ப்பற்ற பொருட்கள் கலந்துள்ளதா என கண்டறியப்படுகிறது. ஒவ்வொரு பயிருக்கும் குறைந்தபட்ச தர நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

வெண்டை 99 சதவீதம், கேழ்வரகு, எள் 97 சதவீதம், நிலக்கடலை, பீட்ரூட், முருங்கை 96 சதவீதம்,

காரட், பீன்ஸ், கீரை, மல்லி 95 சதவீதம், இதர பயிர்களுக்கு 98 சதவீதம் புறத்தூய்மை இருக்க வேண்டும்.விதைமாதிரிகளில் புறத்தூய்மை பரிசோதனை செய்து நல்ல விதைகளை விதைத்து சிறந்த மகசூல் பெறலாம்.இவ்வாறு விதைப்பரிசோதனை அலுவலர் முகமதுகாசிம் தெரிவித்தார்.

## உப்பு கொள்முதல் விலை கடும் சரிவுபொய்த்து போனது மழை

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,02:35 IST

தூத்துக்குடி:தூத்துக்குடியில் எந்தாண்டும் இல்லாத அளவுக்கு இந்தாண்டு உப்பு கொள்முதல் விலை கிடுகிடுவென சரிந்துள்ளது. 1 டன் ரூபாய் 2ஆயிரத்திற்கு விற்ற காலம் போய் தற்போது டன் ரூபாய் 800க்கு விற்கும் நிலைக்கு உப்பு உற்பத்தியாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். தூத்துக்குடி மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் உப்பு உற்பத்தி நடந்து வருகிறது. தூத்துக்குடியில் மட்டும் ஆயிரக்கணக்கான உப்பளங்களில் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. உப்பளங்களை நம்பி ஏராளமான தொழிலாளர்கள் வாழ்க்கையை நடத்திவருகின்றனர். வெளிநாடுகளில் தனிமவுசு: தூத்துக்குடியில் உற்பத்தியாகும் உப்பு கப்பல்கள் மூலம் இலங்கை, இந்தோனேஷியா, மாலத்தீவு உட்பட பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இப்படி உலக அளவில் பெயர் பெற்ற தூத்துக்குடி உப்புக்கு இன்று மவுசு குறைந்துள்ளது. இது தூத்துக்குடி உப்பு உற்பத்தியாளர்கள் மத்தியிலும், தொழிலாளர்கள் மத்தியிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தூத்துக்குடி பகுதியில் விளையும் உப்பை விரும்பி வாங்கி வந்தவர்கள் இன்று குஜராத் பக்கம் தங்கள் பார்வையை திருப்பியுள்ளனர். காரணம் தூத்துக்குடியை விட குஜாரத்தில் உப்புகொள்முதல் விலை குறைவு. இதனால் பெரும்பாலான நிறுவனங்கள் குஜராத் உப்பை கொள்முதல் செய்கின்றன. குஜராத்தில் மட்டும் உப்பு கொள்முதல் விலை மிக குறைவாக இருக்க காரணம் என்ன என்பது குறித்து உப்பு உற்பத்தியாளர்களிடம் கேட்டபோது அவர்கள் கூறியதாவது:பொய்த்துபோன மழை: குஜராத் உள்ளிட்ட இடங்களில் தற்பொழுது மழைக்காலம். ஆனால் அங்கு மழையில்லாமல் கோடைக்காலம் போல் வெயில் அடித்துவருகிறது. குஜ ராத்தில் மழை பெய்யும் போது தூத் துக் குடியில் விளையும் உப்புகளுக்கு நல்ல விலை இருக்கும்.

ஆனால் இந்த ஆண்டு அங்கு மழை பொய் த்துபோனதால் உப்பு உற்பத்திஅதி களவில்நடந்துவருகிறது. மேலும் தூத்துக்குடியை விட குஜராத்தில் உப்பு உற்பத்திக்கு ஆகும் செலவு மிகக் குறைவு, தூத்துக்குடியில் உப்பு உற்பத்திக்கு சாதாரணமாக ரூ.500 செலவாகிறது என்றால் குஜராத்தை பொறுத்தவரை 150 ரூபாய் மட்டுமே செலவாகும். காரணம் அங்கு மின்சார செலவு குறைவு. அங்குள்ள உப்பளங்களில் தொழிலாளர்களை விட மிஷின்கள் மூலமே அதிகளவில் உப்பு வாரப்படுகிறது.

மேலும் உப்பு ஏற்றுமதிக்காக உப்பளங்கள் வரை ரயில்வே தண்டவாளங்கள் அமைக்கப்பட்டு

நேரடியாக ரயில்கள் மூலம் உப்பு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் லாரி வாடகை உட்பட பல்வேறு செலவுகள் குறைகிறது. இதனால் பெரும்பாலான வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் குஜராத் உப்பை கொள்முதல் செய்கின்றனர். ஆனால் தமிழ்நாட்டில் ஏற்கனவே இருந்த மின்சார செலவை விட தற்பொழுது கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன் தமிழக அரசு மின் கட்டணத்தை உயர்த்தி இருப்பது ஒட்டு மொத்த உப்பு உற்பத்தியாளர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. உப்பு விற்ற பணத்தில் 75 சதவீதம் மின்சாரம் கட்டணம் செலுத்தவே சரியாகிவிடுகிறது. இதனால் குஜராத்தை விட கூடுதலாக கொள்முதல் விலை வைக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றனர்.

அதிகளவில் உப்பு உற்பத்தி நஷ்டத்தில் விற்கும் அவலம்: ஆனால் இன்று நிலைமை தலைகீழாக சென்றுகொண்டிருக்கிறது. பெரும்பாலான வர்த்தகர்கள்,மொத்த கொள்முதல் வியாபாரிகள் தூத்துக்குடியை விட குஜராத்தில் உப்பு கொள்முதல் விலை குறைவாக உள்ளதால் பெரும்பாலான நாடுகளுக்கு கு ஜராத் திலி ருந்தே ஏற்று மதியாகிறது.இதனால் தூத்துக்குடி பகுதி உப்பளங்களில் உப்பை வாங்க ஆளில்லாமல் பல்வேறு இடங்களில் குவித்து வைத்துள்ளனர். அடுத்தடுத்து உப்பளங்களில் இருந்து உப்பு தொடர்ந்து விளைந்துகொண்டிருப்பதாலும், சேர்த்துவைத்த உப்பு வீணாகிவிடக்கூடாது என்பதற்காகவும், டன் 2ஆயிரம் ரூபாய்கு விற்ற உப்பை இன்று வெறும் 800 ரூபாய்க்கு விற்க உப்பு உற்பத்தியாளர்கள் முன்வந்துள்ளனர். விற்பனையாகாமல் அம்பாரங்களில் வெறுமனே இருப்பதை விட லாபம் இல்லா விட்டாலும் பராவாயில்லை. பெருத்த நஷ்டம் ஏற்படாமல் இருக்க குறைந்த விலைக்கு விற்கவேண்டிய சூழ்நிலைக்கு தூத்துக்குடி பகுதி உற்பத்தியாளர்கள் வந்துவிட்டனர்.
மொத்த கொள்முதலும் அடியோடு நின்றுவிட்டது: கடந்த சில ஆண்டுகளுக்கு முன் தூத்துக்குடி துறைமுகம் வழியாக 10 ஆயிரம் டன்னிலிருந்து 25 ஆயிரம் டன் வரை கப்பல்கள் மூலம் வெளிநாடுகளுக்கு உப்பு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. உள்நாட்டு வியாபாரம் கை கொடுக்காத சமயத்தில் இதுபோன்ற மொத்த கொள்முதல் பல சமயங்களில் தூத்துக்குடி உப்பு உற்பத்தியாளர்களுக்கு கை கொடுத்து வந்தது. ஆனால் தற்போது அதுபோன்ற மொத்த கொள்முதலும் அடியோடு நின்றுவிட்டது. இந்தோனேஷியா, இலங்கை போன்ற நாடுகளில் மழை இல்லாத காரணத்தால் அங்கு ஓரளவுக்கு விளையும் உப்பு அவர்களுக்கு போதுமானதாக இருக்கிறது.

இதனால் அவர்களும் தூத்துக்குடியில் உப்பு கொள்முதல் செய்வதை நிறுத்திவிட்டனர்.
மின்கட்டணத்தில் மானியம் இருந்தால் தப்பிக்கலாம்: தூத்துக்குடி மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வாழ்வு அளித்துவரும் உப்புத்தொழில் தற்பொழுது பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்டு வருகிறது. நிலைமை இப்படியே சென்றால் ஒரு காலத்தில்

மாவட்டம் முழுவதும் உப்பு உற்பத்தி கடுமையாக பாதிக்கும் அபாயம் ஏற்படும். இதனால் பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். எனவே பல்வேறுதொழில்களுக்கு சலுகை வழங்கிவரும் தமிழக அரசு உடனடியாக உப்பு தொழிலுக்கும் மானியம் வழங்கவேண்டும். அல்லது குறைந்தபட்சம் மின்கட்டண உயர்வையாவது குறைக்கவேண்டும் என்று உற்பத்தியாளர்கள், தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மிளகாய் பயிரிடும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்க வேண்டும்**

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2012,02:35 IST

எட்டயபுரம்:மிளகாய் பயிரிடும் விவசாயிகளுக்கு உடனடியாக ஊக்கத்தொகை வழங்க வேண்டுமென மதிமுக.,விவசாய அணி வலியுறுத்தி வருகின்றனர்.
இதுகுறித்து தமிழக முதல்வருக்கு மதிமுக.,மாநில விவசாய அணி துணை செயலாளர் வரதராஜன் அனுப்பியுள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது, கோவில்பட்டி ஆர்டிஓ., எல்கைக்குட்பட்ட புதூர், விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம், கோவில்பட்டி, கயத்தார் வட்டாரங்களில் சுமார் 2.5 லட்சம் ஏக்கர் மானாவாரி விவசாய நிலங்களும், 70 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட பாசனவசதி கொண்ட நிலங்களும் உள்ளன. இப்பகுதிகளில் உளுந்து, பாசி, கம்பு, மக்காச்சோளம், சூரியகாந்தி, மிளகாய் போன்றவைகளை விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக வத்தலுக்கு நிரந்தரமான விலை இல்லாததால் மிளகாய் சாகுபடியை கொஞ்சம் கொஞ்சமாக விவசாயிகள் குறைத்துக் கொண்டனர். இன்னும் இருபது ஆண்டுகளுக்குள் மிளகாய் சாகுபடி அறவே அற்று போய்விடுமோ என்ற அச்சம் அரசுக்கு ஏற்பட்டது.

அதனால் மிகளாய் பயிரிடும் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் தொடர்ந்து மிளகாய் சாகுபடி செய்வதற்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.12 ஆயிரத்து 500 ஐ ஊக்கத்தொகையாக அரசு வழங்க முடிவு செய்தது. அதன் அடிப்படையில் விவசாயிகளின் பங்களிப்பாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.500ஐ விவசாயிகளிடம் தோட்டகலைதுறை வசூல் செய்தது. அவ்வகையில் புதூர் வட்டாரத்தில் மிளகாய் சாகுபடி செய்யும் விவசாயிகளை கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு கணக்கெடுப்பு நடத்தியது. அதில் புதூர் வட்டாரத்தில் 900 ஹெக்டேர் பரப்பளவில் சுமார் ஆயிரத்து 800 விவசாயிகளும் இதே போல விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம், கோவில்பட்டி, கயத்தார் உட்பட்ட வட்டாரங்களில் சுமார் ஒன்பதாயிரம் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக ரூ.2.5 கோடியை தோட்டக்கலை மூலம் விவசாயிகளுக்கு வழங்க அரசு ஒதுக்கீடு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இந்த தொகையை விவசாயிகளுக்கு வழங்காமல் தோட்டக்கலை துறையினர் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக இழுத்தடிப்பு செய்கின்றனர்.

விவசாய பருவ ஆண்டு துவங்க உள்ள நிலையில் இந்த ஊக்கத்தொகை பெரும் பயனுள்ளதாக இருக்கும். எனவே மிளகாய் பயிரிடும் விவசாயிகளுக்கு மாவட்ட தோட்டக்கலைத்துறை உடனடியாக ஊக்கத் தொகையை வழங்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.

---

தினகரன்

பருவ மழை தாமதத்தால் வெற்றிலை விலை உயர்கிறது மூட்டை ரூ.7 ஆயிரத்துக்கு ஏலம்

பதிவு செய்த நேரம்:2012-07-02 09:40:59

தர்மபுரி: தமிழகத்தில் பருவ மழை பொழிவு தாமதமாகியுள்ளது. இதனால் வெற்றிலை விலை அதிகரித்து வருகிறது. நேற்று ஒரு மூட்டை ரூ.7 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களில் தென்மேற்கு பருவமழை இதுவரை துவங்கவில்லை. பருவ மழையை எதிர்பார்த்து விவசாயிகள் சாகுபடியை துவங்காமல் உள்ளனர். கோடை மழை பொழிவு குறைவு மற்றும் பருவ மழை தாமதம் போன்ற காரணங்களால் வெற்றிலை சாகுபடி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. மழையின்றி வெற்றிலை கொடி வளர்ச்சி பாதிப்படைந்துள்ளது. இதனால் வெற்றிலை உற்பத்தி குறைந்து, விலை உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் கும்பகோணம், ஈரோடு, கோவை, பொள்ளாச்சி, பரமத்திவேலூர், தர்மபுரி உள்ளிட்ட மாவட்டங்களில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. இவற்றில் கற்பூர வெற்றிலை, கார வெற்றிலை, பச்சை வெற்றிலை, சக்கர வெற்றிலை, கறுப்பு கொடி வெற்றிலை, வெள்ளைமார் வெற்றிலை உள்ளிட்ட பல ரகங்களை விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். கற்பூரம் மற்றும் வெள்ளைமார் வகை வெற்றிலை அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

தமிழகத்தின் பல மாவட்டங்களுக்கும், ஆந்திரா, கர்நாடகா, கேராளா உள்ளிட்ட மாநிலங்களுக்கும் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. நன்கு முதிர்ந்த 50 வெற்றிலை ஒரு கவுளியாகவும், 104 கவுளி சேர்ந்தது ஒரு கட்டு எனவும், 128 கட்டு அல்லது சுமை சேர்ந்தது ஒரு மூட்டை எனவும் தரம் பிரிக்கப்படுகிறது. கடந்த வாரம் கற்பூர வெற்றிலை ஒரு சுமை ரூ.4 ஆயிரத்துக்கும், வெள்ளைமார் ஒரு சுமை ரூ.3 ஆயிரத்து 500க்கும் ஏலம் போனது.

இந்நிலையில் கோயில் விழாக்கள், திருமண நிகழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு சுப நிகழ்ச்சிகள் அதிகளவில் நடந்து வருவதால் வெற்றிலைக்கான தேவை அதிகரித்துள்ளது. இதனால் தற்போது ஒரு சுமை வெற்றிலை ரூ.4 ஆயிரம் முதல் ரூ.7 ஆயிரம் வரை ஏலம் போகிறது.

இதுகுறித்து தர்மபுரி வெற்றிலை வியாபாரி கோவிந்தசாமி கூறுகையில், தர்மபுரி மாவட்டத்தில் பென்னாகரம், தாசம்பட்டி, கோடியூர், பி.அக்ரஹாரம் உள்ளிட்ட பகுதிகளில் அதிகமாக வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. வழக்கமாக ஜூன் முதல் வாரத்தில் இருந்தே மழை பெய்ய ஆரம்பித்துவிடும். தர்மபுரி மாவட்டத்தில் சாரல் மழை மட்டுமே பெய்தது. மழை பெய்யாததால் வெற்றிலை கொடி பிடிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. சாகுபடி அளவு குறைந்ததால் விலை ஏற்றமடைந்துள்ளது. இனி மழை பெய்தால் தான் விலை குறையும் என்றார்.